Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk



ஈசன் அடி போற்றி எந்தை அடி போற்றி
தேசன் அடி போற்றி! சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி!
மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடி போற்றி
சீர் ஆர் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி...

WEDNESDAY, FEBRUARY 26, 2025

புதன்கிழமை 26, பெப்ரவரி 2025 | ஒளி: 10 கதிர்: 167 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE

# 109 மேலதிக வாக்குகளால் பட்ஜெட் பாஸ்

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் 2025ஆம் ஆண்டுக்கான கன்னி வரவு செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு 109 மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது.

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, 2025ஆம் ஆண்டுக்கான கன்னி வரவு செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்புக்கு ஆதரவாக 155 வாக்குகளும் எதிராக 46 வாக்குகளும் அளிக்கப்பட்ட நிலையிலேயே 109 மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது.

2025ஆம் ஆண்டுக்கான கன்னி வரவு செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பின்போது அரசு தரப்பினருடன் இணைந்து ஜனநாயக தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட

தொடர்ச்சி P2

# மின் கட்டணம் அதிகரிக்கும் அபாயம்

தற்போதைய வறண்ட வானிலை நீடித்தால் மின் கட்டணங்களை உயர்த்த வேண்டியிருக்கும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் பொறியியலாளர் குமார ஜயகொடி தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், மின்சாரக் கட்டணங்களை 20% குறைத்தோம். ஆனால், வறட்சி இப்படியே சென்றால் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

இந்த 6 மாதங்களில் 42 பில்லியன் ரூபாய் நட்டம் ஏற்படுகிறது.

இந்த வறட்சி அதிகரித்தால் அது மேலும் அதிகரிக்கும் என்றார்.

## “பறக்காத 3 விமானங்களுக்கு 9 இலட்சம் டொலர் வாடகை”




ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்திடம் பல ஆண்டுகாலமாக பயன்படுத்தாதுள்ள விமானங்களுக்கு மாதம் 9 இலட்சம் டொலர் என்ற அடிப்படையில் தவணைப் பணம் செலுத்தப்பட்டுள்ளது. இந்நிறுவனம் பாரிய நிதி மோசடி செய்துள்ளது என பிரதி நிதி அமைச்சர் ஹர்ஷன சூரியபெரும தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



# 1989 இல் படுகொலைகள்: சபையில் பதற்றம்

1989ஆம் ஆண்டு கிளர்ச்சியின் போது, ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் கமகெதர திசாநாயக்க மற்றும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ரோகிணி கவிரத்ன ஆகியோர் கொலைக் குற்றச்சாட்டுகளைச் சுமத்தியதால் செவ்வாய்க்கிழமை (25) சபையில் சூடான வாதங்கள் வெடித்துள்ளது.

1989ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தல் பிரசாரத்தின் போது, பாராளுமன்ற உறுப்பினர் கவிரத்னே முன்னாள் அமைச்சரான தனது தந்தை எட்டு பேரைக் கொலை செய்ததாக, பாராளுமன்ற உறுப்பினர் கமகெதர பொய்யான கூற்றைச் சொன்னதாகக் குற்றம் சாட்டியபோது வாக்குவாதம் வெடித்துள்ளது.

தொடர்ச்சி P2

## “நீர் மின் உற்பத்தி 20 சதவீதமாகக் குறைந்தது”

இலங்கையில் நிலவும் வறட்சியான வானிலை காரணமாக, அதிக அளவு வெப்பம் காரணமாக நீர் மின்சாரத்தைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் குறைந்துள்ளதாக இலங்கை மின்சார வாரியத்தின் (CEB) அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



## மாலைதீவு உயர்ஸ்தானிகருடன் ஜனாதிபதி சந்திப்பு

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவிற்கும் மாலைதீவு குடியரசின் உயர்ஸ்தானிகர் மசூத் இமாட்க்கும் (Masood Imad) இடையிலான கலந்துரையாடல் செவ்வாய்க்கிழமை (25) அன்று ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2

## “ரணிலை கழித்தால் 950 ரூபாவே கிடைக்கும்”



அரச ஊழியர்களுக்கு இந்த அரசாங்கத்தால் 8,250 ரூபாவே சம்பள அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் ஏப்ரல் மாதத்தில் வழங்கப்படவுள்ள 5,950 ரூபாவிலும் 5ஆயிரம் ரூபா ரணில் விக்ரமசிங்க மார்ச் மாதம் வரை வழங்கியது .

தொடர்ச்சி P2

## பாரதியின் அஞ்சலி நிகழ்வில் நாமல்



கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் தமிழ் பத்திரிகையாளர்கள் கூட்டணி ஏற்பாடு செய்திருந்த மறைந்த மூத்த ஊடகவியலாளரும் முன்னாள் தினக்குரல் ஆசிரியருமான பாரதி ராஜநாயகத்தின் நினைவு அஞ்சலி நிகழ்வில் நாமல் ராஜபக்ஷ பங்கேற்றார். இதன்போது, செல்வராசா கஜேந்திரன், சி.வி.விக்னேஸ்வரன், சிவஞானம் சிறீதரன் ஆகியோரை சந்தித்துள்ளதையும் படங்களில் காணலாம்...

## “தனியார்த் துறைக்கும் சம்பளம் அதிகரிக்கப்படும்”



பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் ஒருசில வரையறைகளுக்கு மத்தியில் தான் அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது. பொருளாதார வளர்ச்சிக்கு அமைய எதிர்வரும் காலங்களில் அரச மற்றும் தனியார் துறையினருக்கு சம்பள வேதானிகள் அதிகரிக்கப்படும் என்று பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## “வேலை முடிந்தது, வேலை சரி”


### தாயும் இளைய சகோதரனும் கைது



“வேலை முடிந்தது, வேலை சரி”. ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல் தலைவர் என்று கூறப்படும் கணேமுல்ல சஞ்சீவாவை கொன்ற பிறகு, சந்தேக நபரான வழக்கறிஞர் வேடமணிந்த பெண்,

தொடர்ச்சி P2

## “எனக்கு 2 பொலிஸார் வேண்டும்”



தனது பாதுகாப்புக்காக பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (25) சிறப்புரிமை பிரச்சினையொன்றை எழுப்பி

தொடர்ச்சி P2

## கெஹெலியவின் குடும்பத்தினருக்கும் சிக்கல்



முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களின் சொத்துகள் தொடர்பான அசல் ஆவணங்களின் சான்றளிக்கப்பட்ட பிரதிகளை அவர்களுக்கு வழங்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் இன்று உத்தரவிட்டுள்ளது.

கையூட்டல் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவால் நடத்தப்பட்ட விசாரணை தொடர்பாக, அவர்களின் வங்கிக் கணக்குகள்,

தொடர்ச்சி P2

## ஞானசார தேரருக்கு பிணை



இஸ்லாத்தை அவமதித்த குற்றச்சாட்டில் ஒன்பது மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரை விடுதலை செய்ய கொழும்பு மேல் நீதிமன்றம், செவ்வாய்க்கிழமை (25) உத்தரவிட்டது.

தொடர்ச்சி P2



## வறட்சியால் 7,258 பேர் பாதிப்பு

நாட்டில் நிலவும் கடுமையான வெப்பம் காணரமாக, பல பகுதிகளில் மக்கள் தற்போது குடிநீர் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர்.

இதன்படி, 2,295 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 7,258 பேர் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# 109 மேலதிக வாக்குகளால் பட்ஜெட் பாஸ்

எம்.பி. செல்வம் அடைக்கலநாதன் ஆதரவாக வாக்களித்த நிலையில், சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி . ஜீவன் தொண்டமான், நாமல் ராஜபக்ஷ பிரதிநிதித்துவப்படுத்தும் பொதுஜன பெரமுன,ரவி கருணாநாயக்க பிரதிநிதித்துவப்படுத்தும் புதிய ஜனநாயக முன்னணி, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய கட்சிகள் எதிராக வாக்களித்தன.

அதேவேளை, சிறீதரன் எம்.பி தலைமையிலான தமிழரசுக்கட்சியும் சுயேட்சைக்குழு 17இன் தலைவரும் யாழ். மாவட்ட எம்.பியுமான இ.அர்ச்சுனா உட்பட 23 பேர் வாக்களிப்பில் பங்கேற்கவில்லை.

## “பறக்காத 3 விமானங்களுக்கு 9 இலட்சம் டொலர் வாடகை”

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை(25) இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தின் போது, ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி. ரோஹண பண்டார முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்திடம் 22 விமானங்கள் உள்ளன. இவற்றில் 3 விமானங்கள் பல ஆண்டுகளாக பயன்படுத்தப்படவில்லை. ஆனால், அவற்றுக்காக மாதம் 9 இலட்சம் டொலர் என்ற அடிப்படையில் தவணைப் பணம் செலுத்தப்பட்டுள்ளது என்றார்.

# 1989 இல் படுகொலைகள்: சபையில் பதற்றம்

“என் தந்தை யாரையும் கொலை செய்ததில்லை, ஏனெனில், அவருக்குப் பைத்தியம் இல்லை” என்று திருமதி கவிரத்னே கூறியுள்ளார்.

இதற்கு பதிலளித்த பாராளுமன்ற உறுப்பினர் கமகெதர, 1989 ஆம் ஆண்டு மாத்தளையில் 140 இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டதில் யார் ஈடுபட்டார்கள் என்று கேள்வி எழுப்பினார்.

இது குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது, இந்தக் கொலைகளுக்குப் பின்னால் யார் இருந்தார்கள் என்பது விரைவில் வெளியாகும், ”என்று அவர் கூறினார்.

இந்த நேரத்தில் குறுக்கிட்ட அரசாங்கத்தின் பிரதம கொறடா நளிந்த ஜயதிஸ்ஸ, திருமதி கவிரத்ன அல்லது வேறு எந்த எம்.பியும் தனிப்பட்ட விஷயங்களை எழுப்புவதற்காகப் பாராளுமன்றத்தின் நேரத்தை வீணாக்க முடியாது என்றார்.

“ஒரு கட்சித் தலைவர் ஒரு முக்கியமான விஷயத்தில் நிலையியல் கட்டளைகள் 27(2) இன் கீழ் கேள்வி எழுப்பலாம். கூடுதலாக, வேறு எந்த எம்.பியும் சபாநாயகரைச் சந்தித்து முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விடயத்தைப் பற்றி அவருக்கு விளக்கி, பின்னர் அமர்வுகளின் போது அந்த விஷயத்தை எழுப்பலாம்.

இருப்பினும், எந்த எம்.பி.யும் சபையில் தனிப்பட்ட விஷயத்தை எழுப்ப முடியாது” என்று அவர் கூறியுள்ளார்.

## மாலைதீவு உயர்ஸ்தானிகருடன் ஜனாதிபதி சந்திப்பு



இதன்போது, மாலைதீவு மற்றும் இலங்கைக்கு இடையில் கூட்டு சுற்றுலா திட்டம் செயற்படுத்துவது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

கடந்த தேர்தல்களில் ஜனாதிபதி தலைமையிலான தற்போதைய அரசாங்கம் அடைந்த வெற்றிகளுக்கு மாலைதீவு குடியரசின் வாழ்த்துகளைத் தெரிவித்த உயர்ஸ்தானிகர், தேர்தல் வெற்றியைத் தொடர்ந்து நாட்டில் ஏற்பட்டுள்ள புதிய மாற்றங்கள் குறித்து மகிழ்ச்சியையும் தெரிவித்துள்ளார்.

மாலைதீவு மற்றும் இலங்கைக்கு இடையேயான 60 ஆண்டு கால நட்பை வலுப்படுத்தி, தொடர்ந்து பேணுவது குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளன.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்துவதில் மாலைதீவு ஆற்றும் சிறப்பான பங்களிப்பிற்கு ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தனது பாராட்டுகளைத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரோஷன் கமகே, மாலைதீவு குடியரசின் வெளியுறவு செயலாளர் பாத்திமத் இனாயா (Fathimath Inaya), இரண்டாம் செயலாளர் அமினாத் அப்துல்லா தீதி (Aminath Abdulla didi) உள்ளிட்ட பலர் இச்சந்திப்பில் கலந்து கொண்டுள்ளனர்.

## ஞானசார தேரருக்கு பிணை

கொழும்பு நீதவான் நீதிமன்றத்தால் ஜனவரி 9 ஆம் திகதி வழங்கப்பட்ட ஒன்பது மாத ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனைக்கு எதிராக ஞானசார தேரர் தாக்கல் செய்த மேல்முறையீட்டை பரிசீலித்த பின்னர் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

ஞானசார தேரருக்கு ஐயாயிரம் ரூபாய் ரொக்கப் பிணையும், தலா ஒரு மில்லியன் ரூபாய் மதிப்புள்ள இரண்டு சரீரப் பிணைகளும் வழங்கப்பட்டுள்ளன.

2016 ஜூலை 16, அன்று கிருலப்பனையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், “இஸ்லாம் ஒரு புற்றுநோய்.. அதை ஒழிக்க வேண்டும்” என்று கூறினார். இன நல்லிணக்கத்தை மீறும் வகையில் செயல்பட்டதாகக் கூறி, தண்டனைச் சட்டத்தின் பிரிவு 291 இன் கீழ் ஞானசார தேரருக்கு எதிராக பொலிஸார் இந்த வழக்கைப் பதிவு செய்தனர்.

கலகொட அத்தே ஞானசார தேரர் சார்பாக சமர்ப்பிக்கப்பட்ட பிணை மனுவை கொழும்பு மேலதிக நீதவான் பசன் அமரசேன நிராகரித்ததை அடுத்து, ஜனவரி 9 ஆம் திகதி இந்த சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதை அடுத்து, மேல் நீதிமன்றத்தில் திருத்த மனு தாக்கல் செய்யப்பட்டது.

## “எனக்கு 2 பொலிஸார் வேண்டும்”

உரையாற்றிய அவர் சபாநாயகரிடம் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “அண்மையில் நான் எதிர்கொள்ள நேர்ந்த சம்பவமொன்று எனது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

அதற்கிணங்க பெப்ரவரி 12ஆம் திகதி இரவு யாழ். வலம்புரி ஹோட்டலில் என் மீதும், எனது செயலாளர் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது. அது தொடர்பில் நான் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளேன். அந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

எனினும், நான் அறியாத வகையில் சடுதியாக எனக்கெதிராக வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த விடயம் பாராளுமன்ற உறுப்பினரான எனக்கு பாதுகாப்பு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

அண்மையில் கனேமுல்ல சஞ்சீவ நீதிமன்றத்தில் கொலை செய்யப்பட்டுள்ளார். அதேபோன்று கடந்த வாரங்களில் பல்வேறு கொலைச் சம்பவங்களும் நாட்டில் இடம்பெற்றுள்ளன.

இந்நிலையில் எனக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் தொடர்பில் சிறப்புரிமையை முன்வைக்கின்றேன்.

அதன்படி எனக்கு இரண்டு பாதுகாப்பு உத்தியோகத்தர்களை எனது பாதுகாப்புக்காக நியமிக்குமாறு நான் கேட்டுக்கொள்கின்றேன்.

இது தொடர்பான வேண்டுகோளை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சருக்கும் அனுப்புமாறு கேட்டுக்கொள்வதுடன், இந்த அவசர நிலையை கருத்திற்கொண்டு சாதகமான பதிலையும் உடனடியாக எதிர்பார்க்கின்றேன்” என்றார்.

அதற்கு பதிலளித்த சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன சிறப்புரிமைகள் தொடர்பான பிரச்சினைகள் இருப்பின் அது தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறியுள்ளார்.

## கெஹெலியவின் குடும்பத்தினருக்கும் சிக்கல்

ஆயுள் காப்பீடு போன்றவற்றை முடக்குவதற்குக் கொழும்பு மேல் நீதிமன்றம் முன்னதாக உத்தரவுகளைப் பிறப்பித்திருந்தது.

எனினும், இது தொடர்பாக கெஹெலிய ரம்புக்வெல்ல மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் சார்பாக இன்று மன்றில் முன்னிலையான சட்டத்தரணிகள், நீதிமன்ற உத்தரவுகளால் முடக்கப்பட்டுள்ள தங்கள் தரப்பினர்களுக்கு அவர்களது சொத்துகள் தொடர்பான அசல் ஆவணங்களின் சான்றளிக்கப்பட்ட பிரதிகளை வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய படபெந்திகே, அசல் ஆவணங்களின் சான்றளிக்கப்பட்ட பிரதிகளை விண்ணப்பதாரர்களுக்கு வழங்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

## ‘வேலை முடிந்தது‘ ‘வேலை சரி’

அவரது சகோதரருக்கு ’வேலை முடிந்தது’ ‘வேலை சரி’ என்று குறுஞ்செய்திகளை அனுப்பியதாக தகவல் வெளியாகியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கணேமுல்ல சஞ்சீவாவை சுட்டுக் கொன்ற பிறகு தப்பி ஓடிய வழக்கறிஞர் வேடமணிந்த சந்தேக நபரான இஷாரா செவ்வந்தி, தனது தம்பியுடன் குறுஞ்செய்தி மூலம் தொடர்பு கொண்டு வந்ததாகவும் பொலிஸார் அறிந்துள்ளனர்.

இந்த சர்ச்சைக்குரிய கொலைக்குப் பின்னணியில் மூளையாகச் செயல்பட்டவர் துப்பாக்கிச் சூடு நடத்தியவர் அல்ல, மாறாக வழக்கறிஞர் வேடமணிந்த சந்தேக நபரான பெண்தான் என்ற தகவலை பொலிஸார் வெளியிட்டுள்ளது.

இந்நிலையில், பாதாள உலகக் குழுத் தலைவர் கணேமுல்ல சஞ்சீவவை கொலை செய்வதற்காக சட்டத்தரணியாக மாறுவேடமிட்டு துப்பாக்கியைக் கொண்டு வந்ததாகக் கூறப்படும் காணாமல் போன பெண்ணின் தாயும் சகோதரனும் கைது செய்யப்பட்டுள்ளதாக கொழும்பு குற்றப்பிரிவு தெரிவித்துள்ளது.

இஷாரா செவ்வந்தியின் தாயாரும் இளைய சகோதரரும் கைது செய்யப்பட்டுள்ளனர். 23 முதல் 48 வயதுக்குட்பட்ட இருவர்களிடமும் நீண்ட நேரம் விசாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. தகவல்களை மறைத்தனர் என்றக் குற்றச்சாட்டின் கீழ் விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று பொலிஸார் அறிவித்துள்ளனர்.

# வறட்சியால் 7,258 பேர் பாதிப்பு

இரத்தினபுரி மற்றும் களுத்துறை மாவட்டங்களிலேயே மக்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்த நிலையம் குறிப்பிட்டுள்ளது. களுத்துறை மாவட்டத்தில் மத்துகம பிரதேச செயலாளர் பிரிவில் 393 குடும்பங்களைச் சேர்ந்த 1,418 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இரத்தினபுரி மாவட்டத்தில், வெலிகபொல பிரதேச செயலாளர் பிரிவில் 828 குடும்பங்களைச் சேர்ந்த 2,226 பேரும், எஹலியகொட பிரதேச செயலாளர் பிரிவில் 1,057 குடும்பங்களைச் சேர்ந்த 3,550 பேரும் கலவானை பிரதேச செயலாளர் பிரிவில், 17 குடும்பங்களைச் சேர்ந்த 64 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சில பகுதிகளில் தாங்கி ஊர்திகளைப் பயன்படுத்தி மக்களுக்குக் குடிநீர் விநியோகிக்கப்படுகிறது.

இதற்கிடையில், வறண்ட காலநிலை காரணமாகக் காட்டுத் தீ ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து அவதானம் செலுத்தும் வகையில், திங்கட்கிழமை (24) முதல் மார்ச் 2ஆம் திகதி வரை ‘தீப்பரல் கட்டுப்பாட்டு வாரம்’ பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

தீ அனர்த்தங்கள் ஏற்பட்டவுடன் அவற்றை அணைப்பது கடினம் என்பதையும், அத்தகைய அனர்த்தங்களால் ஏற்படும் சுற்றுச்சூழல் சேதத்தை மீட்டெடுக்க முடியாது என்பதையும் பொதுமக்கள் கவனத்தில் கொள்ள வேண்டும் என வனவள பாதுகாப்புத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதன் விளைவாக, இந்த நிலைமை குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் தீப்பரவல் கட்டுப்பாட்டு வாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## “நீர் மின் உற்பத்தி...

தற்போது, நாடு முழுவதும் 21 நீர் மின் நிலையங்கள் நிறுத்தப்பட்டுள்ளன. மொத்தத்தில், இந்த நீர் மின் நிலையங்கள் 1441.7 மெகாவாட் திறன் கொண்டவை, இது வறண்ட சூழ்நிலையின் விளைவுகளால் குறைந்துள்ளது, குறைந்தபட்சம் 20 சதவீத திறனில் இயங்கி ஆற்றல் உற்பத்திக்கு பங்களிக்கிறது, அதே நேரத்தில் மழைக் காலங்களில் இது சுமார் 60 சதவீதமாக அதிகரிக்கிறது.

இலங்கை மின்சார வாரியத்தின் (CEB) ஊடகப் பேச்சாளர் தம்மைகே விமலரத்ன கூறியதாவது, நீர் மின் நிலையங்களில் இருந்து மின்சாரம் தயாரிப்பது இலங்கையின் நான்காவது முன்னுரிமையாகும், ஏனெனில், நீர் முக்கியமாக பாசனத்திற்காகப் பயன்படுத்தப்படுகிறது, கிராமங்களுக்கு கீழ்நோக்கி அனுப்பப்படுகிறது மற்றும் குடிநீரை உற்பத்தி செய்ய நீர் சுத்திகரிப்பு செயல்முறைகளில் பயன்படுத்தப்படுகிறது. அந்தத் தேவைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்ட பின்னரே நீர் மின்சாரம் தயாரிக்க தண்ணீரைப் பயன்படுத்த வேண்டும்.

இந்த மாதங்களில் பொதுவாக சூரிய சக்தி 80% திறனில் அதிகமாகப் பங்களிக்கிறது என்றும், நீர் மின் நிலையங்களுக்கு அதிக முதலீடுகள் தேவைப்படுவதாலும், அதை நிர்மாணிப்பதில் அதிக நேரம் செலவிடுவதாலும், நீர் மின் நிலையங்களுக்கு மலிவான மாற்றாகும்.

மற்ற நோக்கங்களுக்காக நீர் பயன்படுத்தப்படுவதாலும், தற்போதைய மழைப்பொழிவு குறைவாக இருப்பதாலும், நீர் மின்சக்தியின் திறன் குறைந்துள்ளது, இருப்பினும், சூரிய சக்தியிலிருந்து உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் அதிகரித்துள்ளது.

நீர் மின்சார உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில், CEB, 600 MW பம்ப் செய்யப்பட்ட சேமிப்பு நீர் மின் திட்டத்தை நிறுவுகிறது.

இது சூரிய மற்றும் காற்றாலை மூலங்களிலிருந்து அதிகப்படியான புதுப்பிக்கத்தக்க ஆற்றலைச் சேமிக்கும்.

இது, 2030ஆம் ஆண்டுக்குள் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியிலிருந்து 70% மின்சாரத்தை உற்பத்தி செய்யும் இலங்கையின் இலக்கை ஆதரிக்கும் எனறு கூறியுள்ளார்

அத்துடன், அரநாயக்க மற்றும் நாவலப்பிட்டியில் அமைந்துள்ள இந்த திட்டத்தில், 2.5 கி.மீ சுரங்கப்பாதை மூலம் இணைக்கப்பட்ட இரண்டு நீர்த்தேக்கங்கள் இடம்பெறும், இது பெரிய அளவிலான எரிசக்தி சேமிப்பு அமைப்பாக செயல்படும் என்று CEB தெரிவித்துள்ளது.

## “ரணிலை கழித்தால்...

அதனை கழித்தால் 950 ரூபாவே அரச ஊழியர்களுக்கு இந்த வருடச் சம்பள அதிகரிப்பாகக் கிடைக்கிறது. ஏப்ரல் மாத சம்பளம் கையில் கிடைக்கும்போது, அரசாங்கத்தின் சம்பள அதிகரிப்பை அரச ஊழியர்களுக்குத் தெரியவரும் என ஐக்கிய மக்கள் சக்தியின் செயலரும் எம்.பியுமான ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (25) இடம்பெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான ஏழாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், மாற்றத்தை ஏற்படுத்துவதாகத் தெரிவித்து ஆட்சிக்கு வந்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், இதுவரை எந்த மாற்றத்தையும் செய்ய வில்லை. ஆனால் அவர்கள் கடந்த அரசாங்கங்களின் கொள்கைக்கு மாறிவிட்டனர் தனியார் மயப்படுத்தல் வெளிநாட்டு முதலீடுகளுக்கு எதிரான நிலைப்பாட்டியேலே இருந்தனர். ஆனால் இன்று தனியார் பல்கலைக்கழகம் அமைப்பதற்கு எதிராகப் போராட்டம் நடத்திய இவர்கள் தற்போது தனியார் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்கள் செல்ல வேண்டும் எனத் தெரிவிக்கின்றனர். நெவில் பெர்ணாந்து பல்கலைக்கழகத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தவர்கள் தற்போது நாட்டில் தனியார் பல்கலைக்கழகம் ஆரம்பிக்க வேண்டும் என்கின்றனர்.

## “தனியார்த் துறைக்கும்...

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (25) நடைபெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் 7 ஆம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

2025ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டம் மக்களுக்கு பயனுடையதாகவே உருவாக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் எதிர்கால திட்டங்கள் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளன.

இது ரணிலின் வரவு-செலவுத் திட்டம், லிபரல் வாத திட்டம், சர்வதேச நாணய நிதியத்தின் திட்டம் என்று எதிர்க்கட்சியினர் பல விமர்சனங்களை முன்வைத்துள்ளனர். தேசிய மக்கள் சக்தியின் அடிப்படை கொள்கைக்கு பரஸ்பரமான வகையில் இந்த பாதீடு முன்வைக்கப்படுகிறது என்றும் குறிப்பிடுகின்றனர்.

இலங்கையில் இவ்வளவு காலமும் புதிய லிபரல்வாத கொள்கைகள் செயற்படுத்தப்படவில்லை. லிபரல்வாத கொள்கை என்று குறிப்பிட்டுக் கொண்டு குடும்ப ஆட்சியும், முதலாளித்துவ கொள்கையையே கடந்த கால ஆட்சியாளர்கள் முன்னெடுத்தார்கள்.

அரச சேவை தொடர்பில் தற்போது பேசப்படுகிறது. எவ்விதமான முறையாக வழிமுறைகளும் இல்லாமல் தான் தற்போதைய எதிர்க்கட்சியினர் அரசியல் சேவைக்காக அரச உத்தியோகஸ்த்தர்களை கடந்த காலங்களில் விஸ்திரப்படுத்தினார்கள்.

கூட்டுப்பொறுப்பு, சமூக பொருளாதாரம் மேம்படுத்தல், சமவுடைமை ஆகியவற்றை உள்ளடக்கிய வகையில் தான் வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்துள்ளோம்.

வங்குரோத்து நிலையடைந்த அரசாங்கத்தையே நாங்கள் பொறுப்பேற்றோம். அரச செலவுகளை இயலுமான வகையில் குறைத்து மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு நலன்புரி சேவைக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பொருளாதார சவால்களுக்கு மத்தியில் மக்களுக்கு இயலுமான வகையில் நிவாரணமளிக்கப்பட்டுள்ளது. அதிக வளம் இருந்திருந்தால் மக்களுக்கு அதிகளவான நிவாரணம் வழங்கியிருப்போம்.

தேசிய மக்கள் சக்தி தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிகள் மறக்கடிக்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிடப்படுகிறது. மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை வரவு-செலவுத் திட்டத்தில் முதல் கட்டமாக குறிப்பிட்டுள்ளோம்.

ஆசிரியர்களுக்கு சம்பளம் அதிகரிக்கப்படவில்லை என்றும் குறிப்பிடப்படுகிறது. பாடசாலை அதிபரின் சம்பளம் 30,105 ரூபாவாலும்,ஆசிரியர்களின் சம்பளம் 25,360 ரூபாவினாலும், இதர அரச சேவையாளர்களின் அடிப்படைச் சம்பளம் 15,750 ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் ஒருசில வரையறைகளுக்கு மத்தியில் தான் அரச சேவையாளர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது என்றார்.

# “இருள் திரையைக் கிழித்து, புதிய யுகத்தின் உதயத்தை காணுவோம்”



உலகெங்கிலும் வாழும் இந்து பக்தர்கள் சிவபெருமானைப் பூஜிக்கும் நாளாக மகா சிவராத்திரி தினம் கருதப்படுகிறது. இது சிவன், பார்வதியின் சங்கமத்தையும், சிவபெருமானால், தெய்வீக நடனமான தாண்டவம் நிகழ்த்தப்படும் சந்தர்ப்பமாகவும் இது நினைவு கூறப்படுகிறது.

இது உலகிலும், வாழ்விலும் “மாயை இருளை” வெற்றிகொள்ளவதை குறிக்கிறது. எனவே,மாயை இருள் நீங்கி ஒளி பிரகாசிக்கும்’ என்ற நம்பிக்கையுடன் இந்து பக்தர்கள் இந்த நாளில் இரவு முழுவதும் விரதமிருந்து தான தர்மங்களில் ஈடுபடுகின்றனர். மேலும் மகா சிவராத்திரி நாளில் வாழ்வில் சுபிட்சம் கிட்டப் பிரார்த்தனைகள் செய்யப்படுகிறது.

சிவன், பார்வதியின் சங்கமம் ஞானம் மற்றும் ஆற்றலின் சங்கமாகும். அது கண்களை மறைத்திருக்கும் மாயையின் திரைகளைக் கிழித்து யதார்த்தத்தின் வெளிச்சத்திற்குக் கண்களைத் திறக்கிறது. பல யுகங்களாக எம்மை சகோதரத்துவத்திலிருந்து ஒதுக்கி வைத்த பிரிவு - பிளவுகளை உருவாக்கிய இருள் திரையைக் கிழித்து, ஒற்றுமையைக் கட்டியெழுப்பி இந்த பூமியில் ஒரு புதிய யுகத்தின் உதயத்தைக் காணும் வேளையில் இந்த தருணம் வந்திருக்கிறது.

இது, மதங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை முன்பை விடவும் வரவேற்று, பாதுகாத்து நாட்டின் அனைத்து மக்கள் குழுக்களும் ஒருவருக்கொருவர் மத்தியில் கௌரவம் - அன்பை முன்னிலைப்படுத்தி எமது தாய் நாட்டின் சுபிட்சத்துக்காக அர்ப்பணிக்கும் தருணமாகும். இந்த வலுவான களத்திலிருந்து சிறந்ததொரு நாட்டை உருவாக்கிக் கொள்ள ஒரே தேசமாக நாம் அனைவரும் முன்னோக்கிச் செல்ல வேண்டும்.

அனைவரும் கோரும் நல்லதொரு அரசியல் கலாசாரத்துடன் கூடிய வளமான நாட்டை கட்டியெழுப்பும் பல புதிய அரசியல், பொருளாதார, சமூக மாற்றங்கள் பலவற்றுடன் தற்போது நாம் மறுமலர்ச்சி யுகத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றோம். மகாசிவராத்திரி தினத்தில் ஒளிரச் செய்யப்படும் விளக்குகளின் ஒளியால் ஒருமித்த மனங்களுடன் நாம் தேர்ந்தெடுத்த பாதையை மென்மேலும் ஒளிரச் செய்ய இலங்கையர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறேன்.

மகா சிவராத்திரியைக் கொண்டாடும் இலங்கை இந்து பக்தர்கள் உட்பட உலகெங்கிலும் உள்ள இந்து மக்களின் நல்ல எண்ணங்களும், விருப்பங்களும் நிறைவேறி அவர்களின் வாழ்வு அர்த்தமுள்ளதாக அமைய வேண்டுமென பிரார்த்திக்கிறேன்.

# “மீனவர்களை கட்டுப்படுத்த தமிழக அரசு தவறியுள்ளது”



சட்டவிரோதமான முறையில் இலங்கை கடற்பரப்பில் நுழைகின்ற மீனவர்களை தமிழ் நாட்டு அரசு கட்டுப்படுத்த தவறியுள்ளதாக மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவு சங்கத்தின் செயலாளர் என்.எம்.ஆலம் தெரிவித்துள்ளார்.

மன்னாரிலுள்ள அலுவலகத்தில் திங்கட்கிழமை (24) அன்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைகின்ற இந்திய மீனவர்களை கடற்படையினர் தொடர்ச்சியாக கைது செய்து வருகின்றனர்.

தொடர்ந்தும் ‘எமது கடல் எல்லையை தாண்டி வராதீர்கள்’ என்ற விடயத்தை அழுத்தமாக தெரிவித்துள்ளோம்.

தமிழக அரசு சட்டவிரோதமான முறையில் இலங்கை கடற்பரப்பில் நுழைகின்ற மீனவர்களை கட்டுப்படுத்த தவறியுள்ளது.

எல்லை தாண்டும் சம்பவத்தை மீனவர்கள் தொழிலுக்குச் செல்லும் மீன்பிடி சிட்டையில் இந்திய கடல் எல்லையை தாண்டாதீர்கள் என்று குறிப்பிட்டுள்ளனர்.

ஆனால், அவர்கள் விதிமுறைகளை மீறி இந்திய கடல் எல்லையை தாண்டி இலங்கை கடல் எல்லையில் வந்து எமது கரையோர பகுதிகளில் மீன்பிடித்து விட்டுச் செல்கின்றனர்.

தொடர்ச்சியாக தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்படுகின்றனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை அத்துமீறி நுழைந்த 32 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளும் முன்னெ டுக்கப்பட்டுள்ளது. 32 மீனவர்களின் நிலையை நாங்கள் நினைக்கின்ற போது உண்மையில் வேதனையாகவே உள்ளது. சக மீனவர்கள் என்ற அடிப்படையில் அவர்களின் கைதுக்கு நாங்கள் வேதனை அடைகிறோம்.

எனினும் கடற்படை முன்னெடுக்கும் கைது நடவடிக்கைகளை நாங்கள் எதிர்க்க முடியாது. குறித்த நடவடிக்கை மூலமாகவே எமது கடல் வளத்தை பாதுகாக்க முடியும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது. கடற்படையினர் இரவு பகல் பாராது எமது கடல் வளத்தை பாதுகாக்க நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். அவர்களுக்கு மீனவர்கள் சார்பாக நன்றிகளை தெரிவித்து க்கொள்கின்றோம் என அவர் தெரிவித்துள்ளார்.

# தேசிய மகா சிவராத்திரி விழா

■ *சிவா ஸ்ரீதரராவ்*

புத்தசாசன சமய கலாசார அமைச்சும், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வழிகாட்டலில் இரத்தினபுரி சிவன் ஆலய சைவ பரிபாலன மகா சபையும், இரத்தினபுரி மாவட்ட இந்து ஸ்வயம் சேவக சங்கமும், இரத்தினபுரி மாவட்ட அறநெறிப் பாடசாலை அபிவிருத்தி ஒன்றியமும் இணைந்து நடாத்தும் தேசிய மகா சிவராத்திரி விழா இரத்தினபுரி இரத்தினேஸ்வரம் ஆலய வளாகத்தில் புதன்கிழமை (26) இடம்பெற உள்ளது.

சிவராத்திரி தினத்தன்று மாலை 6.00 மணிக்கு விழா ஆரம்பமாக உள்ளது. நான்கு ஜாம பூஜைகளுடன், வில்லுப்பாட்டு, நடனம், நாடகம், கதை, பட்டி மன்றம் உட்பட பல்வேறு கலை கலாச்சார நிகழ்வுகளும் இடம்பெற உள்ளன. இந்நிகழ்வில், பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப், பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ய.அநிருத்தனன், சப்ரகமுவ மாகாண ஆளுநர் சம்பா ஜானகி ராஜரத்ன, புத்தசாசன சமய கலாசார அமைச்சர் ஹினிதும சுனில் செனவி, உட்பட பெருந்திரளானோர் பங்கேற்க உள்ளனர்.



# மனைவியுடன் தகாத உறவு: இருவர் கடத்தல்; இருவர் கைது

இரண்டு பேரைக் கடத்தி, காட்டுப் பகுதியில் உள்ள ஒரு பாறைக்கு அருகில் கொண்டு சென்று கொடூரமாக வெட்டி அவர்களைப் படுகாயப்படுத்தி, பின்னர் தப்பிச் சென்ற இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக மாத்தளை தலைமையகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாத்தளை, ஓவிலிகந்த - அங்கும்புர வீதியில் உள்ள காட்டுப்பகுதிக்கே அழைத்துச் சென்று இவ்வாறு கொடூரமான முறையில் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்கள் இறந்துவிட்டதாக நம்பி, தப்பி ஓடி பியகம மற்றும் லக்கல பகுதிகளில் மறைந்திருந்த சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கொரியாவில் வசிக்கும் ஒருவரின் மனைவியுடனான தகாத உறவின் காரணமாக, 1 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள ஒப்பந்தத்தின் அடிப்படையில் கடத்தல் மற்றும் சித்திரவதை மேற்கொள்ளப்பட்டதாக ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.


## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1) மற்றும் 9(2) ஆம் பிரிவின் கீழ் பின்வருமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**லங்காதிலக்க ஜெம்ஸ் (பீவீஜ) எல்டீடி**
பி வி 00318062
இல. 175/சி, மடபத்தர வீதி, பஹல கலத்துர, கிரியெல்ல.

**எபிக்ஸி வென்சர்ஸ் (பீவீஜ) எல்டீடி**
பி வி 00322400
இல. 58/5, 4வது லேன், டி.எம் கொலம்பகே மாவத்தை, கொழும்பு 05.

**நிசி லன் டெரா**
ஜி ஏ 00292570
ஜப்பான் லங்கா ஸ்கை ஹோம்,
வால்பிட பண்ணை, வால்பிட
**கம்பனியின் புதிய பெயர்**
நிசி லன் டெரா ரெய்மெய்

**கிரவுண்ட்வொர்த் இன்வெஸ்ட்மென்ட்ஸ் (பீவீஜ) எல்டீடி**
பி வி 00247355
தளம் 12, மெகா வன், 200, நாவல வீதி, நாரஹேன்பிட்டி, கொழும்பு 05
**கம்பனியின் புதிய பெயர்**
கிரவுண்ட்வொர்த் டிவெலொப்மன்ட் (பீவீஜ) எல்டீடி

**பணிப்பாளர்கள்**


# “குற்ற அலையை கட்டுப்படுத்தவும்”

குற்ற அலையைக் கட்டுப்படுத்த பயங்கரவாத தடைச் சட்டம் பயன்படுத்தப்படாது .மாறாக குற்றவியல் நடவடிக்கை முறை சட்டம் மேலும் பலப்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த கொலைக் கலாசார போக்கு நாட்டின் தேசியப் பாதுகாப்பிற்குப் பிரச்சினையாகக் காணப்படுகின்றது. எனவே, குற்றவியல் சட்டத்தைப் பயன்படுத்தி இந்த குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்தி எடுக்கும் நடவடிக்கைகள் என்ன? வென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அரசிடம் கேள்வி எழுப்பினார்

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (25) விசேட கூற்றை முன்வைத்தே இவ்வாறு கேள்வி எழுப்பிய அவர் மேலும் கூறுகையில்,



இன்று சமூகத்தில் உள்ள அனைவரும் அச்சத்திலும் சந்தேகத்திற்கு மத்தியிலும் வாழ்ந்து வருகின்றனர். சமீபத்தில், பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் அமைச்சு சார் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் நாட்டில் நடந்து வரும் வன்முறை கலாசாரம் குறித்து ஆராயப்பட்டது. இந்த வன்முறை சார் அலையைத் தடுக்க முறையான திட்டமொன்று முன்னெடுக்கப்படும் என்று கூறப்பட்டது.

எனவே, இந்த குற்ற அலையைக் கட்டுப்படுத்த பயங்கரவாத தடைச் சட்டம் பயன்படுத்தப்படாது என்றும், மாறாக குற்றவியல் நடவடிக்கை முறை சட்டம் மேலும் பலப்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டது என்றார்.

# 17 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள்

இந்த ஆண்டு (2025) ஜனவரி முதலாம் திகதியிலிருந்து இன்று வரை 17 துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

பொலிஸ் தலைமையகத்தில் செவ்வாய்க்கிழமை (25) அன்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனை குறிப்பிட்டார்.

இந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களில் 11 சம்பவங்கள் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் கும்பலால் மேற்கொள்ளப்பட்டவை என்றும் எஞ்சிய 6 சம்பவங்கள் காணி தகராறு போன்றவற்றால் இடம்பெற்றவையாகும் எனவும் தெரிவித்தார்.

மேலும், இந்த சம்பவங்களுடன் தொடர்புடைய 49 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதன் போது, பயன்படுத்தப்பட்ட டி-56 ரக துப்பாக்கி, இரு பிஸ்டல்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

# “அனைத்து கடவுச்சீட்டுக்களையும் ஒரு மாதத்திற்குள் வழங்க நடவடிக்கை”

கடவுச்சீட்டு விநியோகச் செயற்பாடுகளை இயல்பு நிலைக்கு கொண்டு வரும் நோக்கில் எஞ்சியுள்ள கடவுச் சீட்டுக்களை, ஒரு மாத காலத்துக்குள் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடருக்கான பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் முதலாவது கூட்டம் அமைச்சரின் தலைமையில் கடந்த 22ஆம் திகதி பாராளுமன்றத்தில் கூடிய போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

மேலும், கடவுச்சீட்டுக்களைப் பெறுவதில் இழக்கப்பட்ட பொதுமக்களின் நம்பிக்கையை மீளவும் உயர்த்தும் அரசாங்கத்தின் உயரிய நோக்குகளை விளக்கிய அமைச்சர், முழு நாள் சேவையை அறிமுகப்படுத்தியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் இவ்வுயரிய நோக்கத்துக்காக அர்ப்பணித்துச் செயற்படும் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்கள ஊழியர்களின் அர்ப்பணிப்புக்களுக்கு நன்றி. தெரிவித்த அவர், உரிய அச்சு இயந்திரங்கள் கிடைத்ததும் யாழ்ப்பாணத்திலும் கடவுச்சீட்டு வழங்கும் அலுவலகம் திறக்கப்படும் என்றார்.

மேலும், இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும் என்ற எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கோரிக்கைகளும் கலந்துரையாடப்பட்டுள்ளன.

உறுப்பினர்களுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் மற்றும் சவால்களை கருத்திற் கொண்டு இவ்விடயம் தீர்மானிக்கப்படும். பாதுகாப்புத் தேவைப்படும் எம்.பி.க்கள் தமக்கு ஏற்பட்டுள்ள சவால்கள், அச்சுறுத்தல்களைப் பட்டியலிட்டுச் சமர்ப்பிக்க வேண்டும். மதிப்பீட்டு அறிக்கைகளைப் பெற்ற பின்னர், சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்கு பாதுகாப்புத் தேவையெனின் அதகுரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார்.

பாதாளக் குழுக்களின் செயற்பாடுகளின் தற்போதைய நிலைமை மற்றும் அவற்றைக் கட்டுப்படுத்துவது குறித்தும் இதில், கலந்துரையாடப்பட்டது. இங்கு கருத்துத் தெரிவித்த பதில் பொலிஸ்மா அதிபர், பிரதானமாக போதைப்பொருள் வர்த்தகத்தை அடிப்படையாகக் கொண்டு பாதாளச் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. வெளிநாடுகளிலிருந்து இந்தப் பாதாளக் குழுக்கள் இயக்கப்படுகின்றன.




# “யார் பெரியவர் என்பதை ஒதுக்கிவிட்டு தீர்வு காண்பதே சிறந்தது”

தன்னை அழிவிலிருந்து காக்க விழித்திருந்த ஒரு பிராமணன் போல, உங்களை அழிவில் இருந்து காக்க வழி தேடும் அறிவியல் விழிப்பு நிலையே சிவராத்திரி. சத்குரு மகா சிவராத்திரி இரவு என்பது பல வாய்ப்புகள் நிறைந்திருக்கும் ஓர் இரவு. நிலவின் சுழற்சிக் கணக்கில், ஒரு மாதத்தின் 14ஆவது நாள், அதாவது அமாவாசைக்கு முந்தின நாள், சிவராத்திரியாகும். அவ்வாறான திருநாளை புதன்கிழமை (26) அன்று உலகவாழ் இந்துக்கள் அனுஷ்டிக்கின்றனர்.

சிவராத்திரிக்குப் புராணங்களில் பல கதைகள் இருந்தாலும், ‘யார் பெரியவர்’ என்ற கதை விளக்கம் என்பது இக்காலத்தில் இலங்கையின் அரசியலுக்கு மிகப் பொருத்தமாகவே இருக்கும் என்பதில் எவ்வாறான மாற்றுக் கருத்துகளுக்கும் இடமில்லை.

“பிரம்மனும், விஷ்ணுவும் தங்களுக்குள் யார் பெரியவர் என்று வாதிட்டனர். அந்த வாதத்திற்குப் பதில் தேடி சிவபெருமானிடம் வந்தனர். அவர்களில் யார் பெரியவர் என்பதை விளக்கிட சிவபெருமான் ஒரு சோதனையை நடத்தினார். தனது தலையையும், பாதத்தையும் காண்பவரே உங்களுள் பெரியவர் என்று கூறி வானத்திற்கும், பூமிக்குமாய் ஜீவஜோதியாய் எழுந்தருளினார்.

அந்த சோதனையை ஏற்று வராக அவதாரம் எடுத்து சிவபெருமானின் காலடியைக் காணப் பூமியைத் தோண்டி சென்றார் விஷ்ணு. அன்னத்தின் வடிவத்தைப் பெற்ற பிரம்மன் சிவபெருமானின் உச்சியைக் காண வானத்திற்கு எழும்பினார். இருவரும் கடுமையாக முயற்சித்தும் சிவனின் தலையையோ, அடியையோ காண முடியவில்லை” இறுதியில் இருவரும் தோல்வியை ஒப்புக்கொண்டனர்.

எமது நாட்டை பொறுத்தவரையில், புரையோடிப் போயிருக்கும் பிரச்சினைகளுக்கு இன்றுமே தீர்வு காணப்படவில்லை. வடக்கு, கிழக்கில் சிறுபான்மையின மக்களின் பிரச்சினை, பெருந்தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினை உள்ளிட்டவற்றை அடுக்கிக்கொண்டே போகலாம். அதுமட்டுமன்றி, பெரும்பான்மை இன மக்களின் சாதாரண பிரச்சினைகள் கூட, பல்வேறு பிரதேசங்களில் தீர்க்கவில்லை. அவ்வாறான மக்கள் கூட்டம் இன்றுமே அவதிப்பட்டுக்கொண்டிருக்கின்றது.

காலகாலம் மாறி, மாறி ஆட்சிப்பீடம் ஏற்றியவர்களுக்கு, கடந்த ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களில் பெரும்பாலான மக்கள், பாடம் புகட்டிவிட்டனர் என்பது தெட்டத்தெளிவாகும். எனினும், பாராளுமன்றத்தில் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் 2025 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்ட விவாதங்களில் உரையாற்றும் மக்கள் பிரதிநிதிகளின் உரைகளின் சாரம்சத்தை அவதானித்தால், “நான் செய்தேன்”, “நீங்கள் செய்யவில்லை” என்பதைக் கூடுதலான வாதமாக இருக்கின்றது.

மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டுமாயின் அரசாங்கத்திடம் சிறந்த அரச பொறிமுறை இருக்கவேண்டும். அடிமட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு, உள்ளூராட்சி மன்றங்களுக்கு உயிர்கொடுப்பது அவசியமாகும். இந்நிலையில், சிவராத்திரி தினத்துக்கு மறுநாளான, வியாழக்கிழமை (27) தேர்தல்கள் ஆணைக்குழு, உள்ளூராட்சிமன்ற தேர்தல் தொடர்பிலான முடிவை எட்டுவதற்குக் கூடவிருக்கின்றது.

இதேபோல, அரசியலமைப்பின், 13ஆவது திருத்தத்துக்கு எவ்விதமான பங்கமும் ஏற்படாது என்றும், புதிய அரசியலமைப்பை வெகு விரைவில் உருவாக்குவோம் என்று அரசாங்க தரப்பினர் கூறிவருகின்றனர். இங்கு, யார் பெரியவர், என்பதைப் புறந்தள்ளிவைத்துவிட்டு, ‘நாங்கள்’ தீர்த்துவைத்தோம் என்பதையே மக்கள் விரும்புகின்றனர் என்பதை இந்நாளில் வலியுறுத்துகின்றோம்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

தெருவில் சும்மா போகும் நாயை கல்லால் எறிந்து, அதனுடன் விரோதிக்க வேண்டிய தேவையில்லை. எதிரிகளுடன் மட்டுமல்ல, எவருடனும் பகையை வளர்த்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை.

இந்தச் செயல்களால் ஏது நன்மைகள் கிட்டப்போகின்றன? பிடிக்காதவர்களுடன் வர்மம் காட்டக்கூடாது. அவர்களை உங்கள் பக்கம் ஈர்க்க, நட்பின் வழியைப் பின்பற்றுங்கள்.

கோபம், ஆணவத்தால் எதையும் சாதிக்க முடியாது; வெறுப்புதான் மிஞ்சும். துன்பங்களை உடைத்தெறிய, நெஞ்சில் அமைதியுடன் யாரையும் கனிவுடன் நோக்குவோம்.

உங்களது நியாயங்களை நிலைநிறுத்த, பிறரை விடாப்பிடியாக வற்புறுத்தத் தேவையில்லை. சொல்ல வேண்டிய விடயத்தில், ‘நான்’ என்ற மமதை கலக்கலாகாது. பணிவுடன் பேசுவதே நிரந்தர வெற்றிக்கு வழிவகுக்கும்.

மனிதனுடன் மட்டுமல்ல, மிருகங்கள், பட்சிகள் என அனைத்து உயிர்களிடமும் பாசத்துடன் நோக்கினால், அவைகள் உங்களுடன் உறவாகி விடும். இந்த உண்மையைச் செயலில் காட்டுங்கள். அனுபவம் மூலம் உணர்வீர்கள்.

கர்வம், அகங்காரம் என்பவை தேகத்தின் நலனுக்கும் கேடானவை; பதற்றம் வேண்டாம், சாந்தியுடன் நெஞ்சத்தை வைத்திருங்கள். கடவுளை நம்பும் நாம், அனைவருக்கும் பிடித்ததைச் செய்வதே மேன்மை.

நன்றி-பருத்தியூர் பால.வயிரவநாதன்



எம்.எஸ்.எம்.ஐயூப்

# தண்டனையின்மை குற்றம் புரிவதை விட மோசமானதாகும்

கடந்த புதன்கிழமை புதுக்கடை நீதிமன்றத் தொகுதியில், ஒரு நீதிமன்ற அறையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூடு சம்பவத்தில் ‘கனேமுல்லே சஞ்ஜீவ’ என்ற பாதாள உலக நபர் கொல்லப்பட்டமை அவ்வாறான முதலாவது சம்பவமல்ல.

கம்பஹ மாவட்டத்தில் வீரங்குல்ல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியும் அவரது மாமனாரும் 1990இல் ஆரம்பத்தில் அத்தனகல்ல நீதிவான் நீதிமன்றத்தினுள் சுட்டுக்கொல்லப்பட்டனர். அதேபோல், பிரபல வர்த்தகரும் பிற்காலத்தில் அரசியல்வாதியுமான திலங்க சுமத்திபாலவுக்கு எதிரான வழக்கொன்றின் பிரதான சாட்சியான தம்மிக்க அமரசிங்க என்னும் பாதாள உலக நபர் 2004இல் புதுக்கடை நீதிமன்றமொன்றில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அத்தனகல்ல நீதிமன்றத்தில் கொல்லப்பட்ட பொலிஸ் அதிகாரி மக்கள் விடுதலை முன்னணியின் இரண்டாவது கிளர்ச்சியின் போது, 12 இளைஞர்களையும் ஒரு யுவதியையும் கைது செய்து கம்பஹ மாவட்டத்தில் வவுலகெலே என்னும் இடத்தில் சித்திரவதை செய்து சுட்டுக் கொன்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு இருந்தார்.

கடந்த புதன்கிழமையும் 2004இல் சம்பவத்தின் போதும் கொல்லப்பட்டவர்கள் பாதாள உலகத்தோடு சம்பந்தப்பட்டவர்களாவர். இரண்டு சம்பவங்களின் போதும் கொலைகாரரர் சட்டத்தரணியைப் போல் உடை அணிந்தே நீதிமன்றத்தினுள் வந்திருந்தார். இரண்டு சம்பவங்களிலும் கொலைகாரரர் இராணுவத்தில் கடமையாற்றி பின்னர் தலைமறைவானவர்கள் என்றே கூறப்பட்டது. இரண்டும் புதுக்கடை நீதிமன்றத் தொகுதியில் இடம்பெற்றன.

வழமை போல், தற்போதைய எதிர்க்கட்சிகளும் எதற்காவது அரசாங்கத்தைக் குறை கூறிக்கொண்டு இருக்கவே காரணங்களைத் தேடிக்கொண்டு இருக்கின்றன. குற்றச் செயல்கள் எப்போதும் ஒரே மாதிரியாக இடம்பெறுவதில்லை. அவை அடிக்கடி அலைகளாகத் தான் இடம்பெறுகின்றன. 1970களின் இறுதியிலிருந்து இச்சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

குற்றச் செயல்களை முற்றாகத் துடைத்தெறிந்த நாடுகள் உலகில் இல்லை. அதேபோல, தமது நாட்டில் கொலைகள் போன்ற குற்றச் செயல்கள் இடம்பெறாது என்ற நூறு வீத உத்தரவாதத்தை ஏந்தவொரு நாட்டுத் தலைவர்களாலும் வழங்க முடியாது.

2019 உயிர்த்த ஞாயிறுத் தினத்தில் பயங்கரவாத தாக்குதல்கள் இடம்பெற்ற போது, lone wolf attacks (தனி ஓநாய் தாக்குதல்கள்) உலகில் எந்தவொரு நாட்டிலும் எந்த நேரத்திலும் இடம்பெறலாம் என்று அப்போதைய இராணுவத் தளபதி மஹேஷ் சேனாநாயக்க கூறினார். ஏனெனில், பாரிய படையணிகளைப் பாவித்து நடத்தும் தாக்குதல்களைப்போலன்றி, அவ்வாறான தாக்குதலொன்றுக்கு மன உறுதியுள்ள ஒரு நபரும் பாதுகாப்பு இயந்திரத்தில் சிறியதோர் ஓட்டையும் மட்டும் இருந்தாலே போதுமானதாகும்.

ஆயினும், கடந்த புதன்கிழமை இடம்பெற்ற சம்பவமானது சிறியதாகக் கருத முடியாத ஒன்றாகும். நீதிமன்றங்கள் பாதுகாப்புக்கு உத்தரவாதமளிக்கப்பட்ட இடங்களாகவே கருதப்படுகின்றன. ஆயினும், ஒரு துப்பாக்கிதாரி அச்சமின்றி அத்தனை தடைகளையும் மீறிச் சென்று பெருந்திரளானோர் கூடியிருக்கும் ஒரு இடத்தில் எவ்வித தடையுமின்றி, மற்றொருவரைச் சுட்டுக் கொன்றுவிட்டுத் தப்பிச் செல்ல முடியுமாக இருந்தால் அது பாரதூரமான நிலைமையாகும்.

ஆனால், அது பலர் கூறுவதைப் போல், தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று கூற முடியாது. அரசு என்ற அமைப்புக்கு அச்சுறுத்தலாக இருந்தால் மட்டுமே ஒரு நிலைமையைத் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகக் கருதப்படுகிறது. புலிகளின் தாக்குதல்களும் மக்கள் விடுதலை முன்னணியின் கிளர்ச்சியின் போது, இடம்பெற்ற சம்பவங்களும் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருந்தன. ஆயினும், இரண்டு பாதாள உலக கும்பல்களுக்கிடையிலான போட்டாபோட்டியால் தேசியப் பாதுகாப்புக்கு எந்தவிதமான அச்சுறுத்தலும் ஏற்படுவதில்லை.

இன்னும் பாதாள உலக குழுக்களுக்கும் சில அரசியல்வாதிகளுக்கும் இடையே உறவு இருப்பதால் அவ்வாறான தாக்குதல்கள் காலப்போக்கில் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையலாம். சிலவேளைகளில் அரச தலைவர்கள் கொல்லப்படுகிறார்கள். ஆயினும் தனிச் சம்பவங்களாக இடம்பெற்றால் அவை தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாவதில்லை.

1984 ஒக்டோபர் மாதம் ஐ.ஆர்.ஏ. அமைப்பு அப்போதைய பிரிட்டிஷ் பிரதமர் மாரகரெட் தட்சரை குறிவைத்து பிரிட்டனில் கிரான்ட் ஹோட்டலில் குண்டு வைத்தது. குண்டு வெடித்தாலும் தட்சர் தப்பித்துக்கொண்டார். 1981இல் ஈரான் ஜனாதிபதி அலி ரஜாயியும் பிரதமர் ஜவாத் பஹோனாரும் மேலும் அறுவரும் குண்டுத் தாக்குதலால் கொல்லப்பட்டனர். 1984இல் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அவரது மெய்ப் பாதுகாவலர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மேலும், 1991இல் அவரது மகனும் முன்னாள் பிரதமருமான ராஜிவ் காந்தி புலிகளால் படுகொலை செய்யப்பட்டார். இவை மிகவும் பாரதூரமான சம்பவங்களாக இருந்த போதிலும், தனிச் சம்பவங்களான அவற்றை அந்தந்த நாட்டுத் தலைவர்கள் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகக் கருதவில்லை.

அதேவேளை, ஒரு காலத்தில் பாதாள உலக கும்பல்களுக்குத் துணையாக இருந்தவர்கள் உள்ளிட்ட இலங்கையின் முன்னைய அரசாங்கங்களின் தலைவர்கள் புதன்கிழமை நீதிமன்றத்தில் இடம்பெற்ற சம்பவம் வரலாற்றில் முதன்முறையாக இடம்பெற்ற ஒன்றைப் போல கருதி, தமது அதிர்ச்சியைத் தெரிவித்திருப்பது மற்றவர்களை அதிர்ச்சியில் ஆழ்த்துகிறது. தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பதவிக்கு வுருவதற்கு முன் இலங்கையில் பாதாள உலக நடவடிக்கைகள் இடம்பெறாததைப் போல் தான் அவர்கள் நாடாளுமன்றத்திலும் வெளியிலும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

பாதாள உலகம் என்பது 1977இல் ஜே.ஆர்.ஜயவர்தன பதவிக்கு வந்தது முதல் உருவான பயங்கர கும்பல்களாகும். அதற்கு முன்னர் கொழும்பில் ‘சொப்பே ஐயா’ போன்ற சண்டியர்கள் இருந்த போதிலும், அவர்கள் குழுக்களாக இயங்கிய துப்பாக்கிதாரிகள் அல்லர். ஜே.ஆரின் காலத்துக்குப் பின்னர் பாதாள உலக குண்டர்கள் அரசியல்வாதிகளால் பணமும் ஏனைய வசதிகளையும் வழங்கி பராமரிக்கப்படலாயினர். சொத்தி உபாலி மற்றும் கோனவல சுனில் ஆகியோர் அக்காலத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற குண்டர்களாவர்.

அக்கால குண்டர்கள் தான் 1981இல் ஆசியாவிலேயே மிகவும் சிறந்த நூலகமொன்றான யாழ். நூலகத்தை எரித்தார்கள். அவர்களே 1983இல் தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளின் போது பல இடங்களில் முன்னணியில் இருந்தனர். 1982இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் மற்றும் சர்வஜன வாக்கெடுப்பு ஆகியவற்றின் போது குண்டர்கள் வாக்குச் சாவடிகளுக்குச் சென்று அதிகாரிகளை மிரட்டி வாக்குப் பத்திரங்கள் அடங்கிய புத்தகங்களைப் பறித்து தாம் விரும்பியவாறு வாக்குப் பெட்டிகளை நிரப்பினர்.

அதன் பின்னர் பதவிக்கு வந்த ஆட்சியாளர்களும் தமக்கென பாதாள உலக கும்பல்களை வைத்திருந்தனர். பிற்காலத்தில் அவர்கள் ஆயுதப் படை வீரர்களையும் முன்னாள் தமிழ் போராளிகளையும் அரசியல் கொலைகளுக்காக பாவித்தனர்.

சொத்தி உபாலி, கொனவல சுனில் ஆகியோர் ஜே.ஆரின் காலத்தில் பாதாள உலக குண்டர்கள், பெத்தகானே சஞ்ஜீவ சந்திரிகாவின் காலத்தில் பாதாள உலகை நடத்தியவர், அவர் ஜனாதிபதியின் பாதுகாப்பு அணியிலும் இடம்பெற்றார். ஜூலம்பிட்டிய அமரே மஹிந்தவின் காலத்தில் அரச ஒத்துழைப்பைப் பெற்ற குண்டர். இரண்டு அரசியல் கொலைகளுக்கு குற்றவாளியாகிய அவருக்கு அண்மையில் மரண தண்டனை வழங்கப்பட்டது.

நடராஜா ரவிராஜ், தியாகராஜா மகேஸ்வரன் மற்றும் ஜோசப் பரராஜசிங்கம் ஆகிய தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அக்காலத்திலேயே மர்மமான முறையில் படுகொலை செய்யப்பட்டனர்.

போதைப் பொருள் வியாபாரி ஒருவரின் இறுதிச் சடங்கில் ஜனாதிபதி ஒருவர் கலந்து கொண்டதாகவும் ஒரு காலத்தில் செய்திகள் வெளியாகின. பாலியல் குற்றமொன்றுக்காகச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட கொனவல சுனிலுக்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்கப்பட்டு பின்னர் சமாதான நீதிவான் பதவியும் வழங்கப்பட்டது. பெத்தகானே சஞ்ஜீவ அலரி மாளிகையை தமது தலைமையகமாகப் பயன்படுத்தினார். ஜே.ஆரின் காலத்தில் பியகம் மற்றும் மஹியங்கன போன்ற பிரதேசங்கள் எதிர்க்கட்சிகளுக்குத் தடைசெய்யப்பட்ட பிரதேசங்களாகவே கருதப்பட்டன.

மஹிந்தவின் காலத்தில் பிரதேச சபைத் தலைவர்கள் தாமாகவே குண்டர்களாக மாறினர். அக்குரஸ்ஸ பிரதேச சபைத் தலைவராக இருந்த ஒருவர் 100 பெண்களை பாலியல் வன்முறைக்குள்ளாக்கி அதனை தமது நண்பர்களுடன் கொண்டாடியுள்ளார். மற்றொரு பிரதேச சபைத் தலைவரும் அவரது ஆதரவாளர்களும் பிரிட்டிஷ் பிரஜை ஒருவரைக் கொலை செய்து, அவரது காதலியைக் கூட்டு வன்புணர்வுக்கு உள்ளாக்கினர். ஆனால், அப்போது இளவரசராக இருந்த தற்போதைய பிரிட்டிஷ் மன்னர் சார்ள்ஸ் தலையிடும் வரை ஒரு வருட காலமாக அந்த பிரதேச சபைத் தலைவர் கைது செய்யப்படவில்லை. தண்டனையின்மை அப்போது நியதியாகியிருந்தது.

தோட்ட முகாமையாளர் ஒருவரை கொன்றமைக்காக தெரனியகல பிரதேச சபைத் தலைவராக இருந்த ‘அத்த கொட்டா’ என்றழைக்கப்பட்ட அணில் சம்பிக்க விஜேசிங்க உள்ளிட்ட 18 பெருக்கு 2019இல் மரண தண்டனை விதிக்கப்பட்டது. தற்போதைய எதிர்க்கட்சிகள் நாட்டை ஆட்சி புரிந்த கடந்த காலங்களில் இது போன்ற சம்பவங்களால் வரலாறு நிறைந்திருக்கிறது.

இப்போது பாதாள உலக கொலைகாரர்களுடன் சில பொலிஸ் மற்றும் இராணுவ வீரர்களும் இணைந்து செயற்படுவதாக அண்மையில் கூறப்பட்டது. இது தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அரசியல் உறுதியுடன் கவனமாகத் திட்டமிட்டுக் கையாள வேண்டிய விடயமாகும்.

## கடிதங்கள்

### “வீதியோர குப்பைகளால் அசௌகரியம்”





ஹட்டன், ஆரியகம பகுதி வீதியோரங்களில் குவிந்து கிடக்கும் குப்பைகளால் அப் பகுதி மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு குவிந்து கிடக்கும் குப்பைகளை ஹட்டன் - டிக் ஓயா நகரசபை ஊழியர்கள் முறையாக அகற்றாததால், இந்தப் பகுதிகளில் இருந்து கடுமையான துர்நாற்றம் வீசுவதாகவும், இந்த குப்பைகளால் ஈக்கள் மற்றும் நுளம்புகள் அதிகரித்து வருவதால், தங்களின் உடல் நலத்திற்கு பல்வேறு அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் ஹட்டன்-டிக்ஓயா நகரசபையின் சுகாதாரப் பிரிவின் அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமெனப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# ஆன்மீக வரலாற்றில் அறிவியலை இணைக்கும் மகா சிவராத்திரி











மகா சிவராத்திரி இந்துக்களால் கொண்டாடப்படும் சிவனுக்குரிய விரதமாகும். இவ்விரதம் ஆண்டுதோறும் மாசி மாதத்தில் வரும் கிருஷ்ணபட்ச (தேய்பிறை) சதுர்த்தசி திதியில் இரவில் கொண்டாடப்படும். அதன்படி, இந்த ஆண்டு 26ஆம் திகதியான இன்று அனுஷ்டிக்கப்படுகின்றது.

சைவத்தின் முழுமுதற் கடவுளான சிவபெருமானின் அருளை பெறுவதற்கும், தாம் செய்யும் பாவங்களில் இருந்து வெளிபடுவதற்கும் ஏற்ற மிக சிறந்த விரத நாளாக சொல்லப்படுவது மகா சிவராத்திரி நாளாகும். உலகிற்கே தலைவனாக இருக்கக் கூடிய, சிவ பூஜையின் மகத்துவத்தை உணர்த்தக் கூடிய நாளாக இருக்கும் மகா சிவராத்திரி வழிபாடு எந்த தலத்தில் தோன்றியது என்ற புராண காரணத்தை தெரிந்து கொள்ளலாம்.

சிவ பெருமானுக்குரிய மிக முக்கியமான, முதன்மையான விரதமான மகாசிவராத்திரி விரதத்தின் சிறப்புக்களை பற்றி சொல்லாத புராணங்களே கிடையாது. சிவ பெருமான், பார்வதி தேவியை திருமணம் செய்து கொண்ட திருநாளையே மகா சிவராத்திரியாக கொண்டாடுகிறோம் என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால் இந்த நிகழ்வு எங்கு நடைபெற்றது? மகாசிவராத்திரி விரதம், வழிபாடு தோன்றிய தலம் எது? என்பதை வாங்க தெரிந்து கொள்ளலாம்.

**மகா சிவராத்திரி வரலாறு:**

மகா சிவராத்திரி தோன்றியது திருவண்ணாமலை தலத்தில் தான் என்பது பலருக்கும் தெரியாத உண்மை. இந்த நாளில் தான் கோடி சூரிய பிரகாசத்துடன் சிவபெருமான் லிங்க வடிவில் திருவண்ணாமலையில் தோன்றினார் என்று புராணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. விஷ்ணுவுக்கும் பிரம்மாவுக்கும் தங்களில் யார் பெரியவர் என்ற சண்டை ஏற்பட்ட போது, அவர்களது சண்டை யைத் தீர்த்து வைக்குமாறு தேவர்கள் அனைவரும் சிவபெருமானிடம் முறையிட்டனர். அதை ஏற்ற சிவபெருமான் மிகப்பெரிய நெருப்புப் பிழம்பாக விஷ்ணு, பிரம்மா இருவர் முன்பும் தோன்றினார் அந்த நெருப்புப் பிழம்பு மண்ணுக்கும், விண்ணுக்கும் பரவி மிகப் பிரம்மாண்டமாக காட்சி அளித்தது.

**சிவராத்திரி தோன்றிய வரலாறு:**

தரை இறங்கியதும் அந்த தாழம்பூ பொய் சாட்சி சொன்னதும் கோபப்பட்ட சிவபெருமான், நெருப்புப் பிழம்பில் இருந்து வெடித்துக் கொண்டு லிங்க வடிவில் வெளியில் வந்தார். விஷ்ணுவுக்கும், தேவர்களுக்கும் கேட்ட வரங்களை எல்லாம் கொடுத்த சிவபெருமான், பொய் சொன்னதற்காக பிரம்மாவுக்கு, பூமியில் கோவில் இல்லை என்றும், தாழம்பூவை பூஜைக்கு தகுதியற்ற மலரா வாய் என்றும் சாபமிட்டார். இந்த நிகழ்ச்சி நடந்தது திருவண்ணாமலையில். இதன் மூலம் உலகில் திருவண்ணாமலையில் தான் முதன் முதலில் அக்னி தோன்றியது என்கிறார்கள். இந்த அக்னியில் இருந்து தான் சூரியன், சந்திரன் பிரகாசங்கள் மற்றும் தீப ஒளிகள் தோன்றின என்று புராணங்களில் எழுதப்பட்டுள்ளது.

**லிங்கோத்பவர் வழிபாடு:**

இந்த அக்னியில் இருந்து வெளியில் வந்த சிவபெருமான் 'லிங்கோத்பவர்' வடிவில் காட்சி கொடுத்தார். இதனால் திருவண்ணாமலையில்தான் முதன் முதலில் லிங்க வழிபாடு தோன்றியது என்பது உறுதியாகிறது. மாசி மாத சிவராத்திரி அன்று இந்த நிகழ்வு நடந்ததால், அது மகா சிவராத்திரி என்று சிறப்பித்துக் கூறப்படுகிறது. ஆக, மகா சிவராத்திரி தோன்றிய தலம் திருவண்ணாமலையே. திருவண்ணாமலையில் இருந்துதான் லிங்கோத்பவர் வழிபாடும், மகா சிவராத்திரி கொண்டாட்டமும் மற்ற தலங்களுக்கு பரவியது.

**மகா சிவராத்திரி விரத முறை:**

நாள் முழுவதும் உண்ணாவிரதம் இருக்க வேண்டும். பகலில் உறங்கக் கூடாது. இரவிலும் நான்கு காலங்களிலும் நடக்கும் பூஜையில் கலந்து கொள்ள வேண்டும். வீட்டில் பூஜை செய்வதாக இருந்தால், மாலையில் குளித்து உலர்ந்த ஆடையணிந்து நெற்றியில் திருவெண்ணீறு அணிந்து, கையில் உத்திராட்ச மாலையுடன் சிவ பூஜையைத் தொடங்க வேண்டும். ஐந்தெழுத்து மந்திரமான சிவாய நம என்ற சொல்லை உச்சரித்து பூஜிக்க வேண்டும். கலச பூஜையுடன் லிங்கத்தை வைத்தும் பூஜை செய்யலாம். சிவபெருமானின் வெவ்வேறு பெயர்களான பவ, சர்வ, ஈசான, பசுபதி, உக்ர, ருத்ர, பீமா மற்றும் மகாதேவா என்று கூறி பூஜிக்க வேண்டும். சிவ பெருமானின் சகஸ்ர நாமத்தை சொல்வதுடன், வில்வ இலைகளை கொண்டு பூஜிக்கலாம். பின்னர் நைவேத்தியம் படைத்து வழிபட வேண்டும்.

**மகா சிவராத்திரி விரத பலன்கள்:**

சிவராத்திரி விரதம் இருப்பதால் தெரியாமல் செய்த பாவங்களுடன், தெரிந்தே பாவங்கள் செய்திருந்தாலும் அவை நம்மை விட்டு நீங்கி விடும். இவர்தான் சிவராத்திரி விரதம் இருக்கலாம். இவர் இருக்கக் கூடாது என எந்த கட்டுப்பாடுகளும் கிடையாது. யார் வேண்டுமானாலும் சிவராத்திரி விரதத்தை மேற்கொள்ளலாம். பூமி தானம், தங்க தானம், கோடிக்கணக்கான பசுக்கள் தானம், புராணங்களில் சொல்லப்பட்ட மற்றைய பல விரதங்களை நெடுங்காலம் கடைபிடிப்பது, நூறு அசுவமேத யாகம் செய்வது, பல முறை கங்கா ஸ்தானம் செய்வது ஆகிய அனைத்தையும் மேற்கொண்டாலும், ஒரு சிவராத்திரி விரதத்தை கடைப்பிடிப்பதற்கு ஈடாகாது.

மகா சிவராத்திரியன்று இரவில் முறைப்படி விரதம் இருந்து சிவனை வழிபட்டால் கோடி பிரம்மஹத்தி தோஷம் விலகும். சிவலோக வாசம் கிட்டும். காசியில் முக்தி அடைந்த பலன் கிடைக்கும். சகல செல்வங்களும், நிறைந்த மங்கல வாழ்வு உண்டாகும் என சிவபுராணத்தில் கூறப்பட்டுள்ளது.

**மகா சிவராத்திரியின் சிறப்புகள்:**

1. சிவராத்திரி என்ற சொல் சிவனுடைய ராத்திரி, சிவமான ராத்திரி, சிவனுக்கு இன்பமான ராத்திரி என்று பல வகைப் பொருளை தருகிறது.

2. சிவராத்திரி 4 ஜாமங்களிலும் ஒருவர் செய்யும் பூஜை, அவரை முக்தி பாதைக்கு அழைத்து செல்ல உதவும்.

3. சூரியன், முருகன், மன்மதன், இந்திரன், எமன், சந்திரன், குபேரன், அக்னி பகவான் ஆகியோர் முறைப்படி சிவராத்திரி விரதம் இருந்து பேறு பெற்றுள்ளனர்.

4. சிவராத்திரியன்று ஆலயங்களுக்கு செல்ல முடியாதவர்கள் வீட்டில் இருந்தபடியே சிவபெருமானுக்கு மனதில் அபிஷேகம் செய்து சிவனை வழிபடலாம்.

5. எறும்பு, நாரை, புலி, சிலந்தி, யானை, எலி போன்றவை கூட சிவபூஜையால் மோட்சம் அடைந்துள்ளன.

6. சிவம் என்ற சொல்லுக்கு மங்களம் தருபவர் என்று பொருள். எனவே எந்த அளவுக்கு ஒருவர் சிவ, சிவ.... என்று உச்சரிக்கிறாரோ, அந்த அளவுக்கு அவர் நன்மை பெறுவார்.

7. சிவராத்திரியன்று திருவிடைமருதூர் மகாலிங்க சுவாமியை வழிபட்டால் மறுபிறவி கிடையாது.

8. சிவராத்திரி தினத்தன்று, தியாகராஜர் என்ற பெயரில் ஈசன் வீற்றிருக்கும தலங்களில் தரிசனம் செய்தால் பாவங்களில் இருந்து விடுபடலாம்.

9. கஞ்சனூரில் ஒரே பிரகாரத்தில் அடுத்தடுத்து 2 தெட்சிணாமூர்த்திகள் உள்ளனர். சிவராத்திரியன்று இவர்களை வழிபட்டால், சிவஞானம் எளிதில் கிடைக்கும் என்பது நம்பிக்கை.

10. சிவபெருமான் லிங்கமாக உருவெடுத்த தினமே சிவராத்திரி என்று ஒரு கருத்து உண்டு.

11. திருவதிகை தலத்தில் உள்ள வீரட்டானேஸ்வரரை சிவராத்திரி தினத்தன்று வழிபட்டால் ஆணவம், கர்மம், மாயை ஆகிய மூன்றும் நீங்கும்.

12. பண்டரிபுரத்தில் உள்ள பாண்டுரங்கன் "சங்கர மற்றும் நாராயண" வடிவம் என்பார்கள். பாண்டுரங்கன் தலையில் கிரீடத்துக்கு பதில் "பாண லிங்கம்" இடம் பெற்றுள்ளது. சிவராத்திரி தினத்தன்று பாண்டுரங்கனுக்கு நிவேதனம் செய்வதில்லை. அவரும் அன்று சிவராத்திரி விரதம் இருப்பதாக சொல்கிறார்கள்.

13. மகா சிவராத்திரி தினத்தன்று அபிஷேகத்துக்கு உரிய பொருட்களை வாங்கி ஆலயத்துக்கு கொடுப்பவர்கள் பரமானந்த நிலையை அடைவார்கள் என்பது ஐதீகம்.

14. ஊத்துக் கோட்டை அருகில் உள்ள சுருட்டப் பள்ளியில் மட்டுமே சயன கோலத்தில் ஈசன் உள்ளார். சிவராத்திரி தினத்தன்று அங்கு ஈசனை வெள்ளி அங்கியில் தரிசனம் செய்யலாம்.

15. சிவராத்திரி தினத்தன்று சிவபுராணம், தேவாரம் மற்றும் திருமுறைகள் படிப்பது மிகவும் நல்லது.

16. திருவைகாவூர் ஈசனை சிவராத்திரி தினத்தன்று வழிபட்டால், மரண பயம் நீங்கும்.

17. கருட புராணம், கந்த புராணம், அக்னி புராணம் உள்ளிட்ட பல்வேறு நூல்களில் சிவராத்திரி மகிமை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

18. சிவராத்திரி தினத்தன்று மாலை சூரியன் மறைந்ததில் இருந்து மறுநாள் காலை சூரியன் உதயமாகும் வரை சிவ பூஜை செய்பவர்களுக்கு எல்லா பாக்கியங்களும் கிடைக்கும்.

19. ஒரு வருடம் சிவராத்திரி விரதம் இருப்பது என்பது நூறு அசுவமேத யாகம் செய்த பலனும், பல தடவை கங்கா குளியல் செய்த பலனும் தரவல்லது

20. சிவராத்திரியன்று கலச பூஜையுடன் லிங்கமும் வைத்து வழிபடுவது கூடுதல் பலன்களைத் தரும்.

**மகா சிவராத்திரி பூஜை காலங்கள்**

முதல் கால பூஜை - மலை 6:30 முதல் இரவு 9:30 மணி வரை

இரண்டாம் கால பூஜை - இரவு 9:30 முதல் நள்ளிரவு 12:30 மணி வரை

மூன்றாம் கால பூஜை - நள்ளிரவு 12:30 முதல் அதிகாலை 3:30 மணி வரை

நான்காம் கால பூஜை - அதிகாலை 3:30 முதல் காலை 6:00 மணி வரை

மகா சிவராத்திரியில் நான்கு காலங்களிலும் இரவில் பூஜை செய்ய வேண்டும். சிவபஞ்சாயதனம் கைக்கொண்டவர்கள் இரவில் பூஜையைத் தரித்து நற்பலன் பெற வேண்டும்.

சிவராத்திரியின் போது, இரவு நான்கு யாமங்களாகப் பிரிக்கப்படுகிறது. அந்த நான்கு யாமங்களிலும் சிவலிங்கத்துக்கு விசேடமாக அபிஷேகங்கள் செய்யப்படுகின்றன. அந்த யாமப் பூசைகளின் போது எவையெவற்றால் வழிபட வேண்டும் என்பதை புனித நூல்கள் எடுத்துக் கூறுகின்றன.

**முதல் யாமம்:** இந்த முதல் கால பூஜை, படைக்கும் தேவன் 'பிரம்மா' சிவபெருமானுக்கு செய்யும் பூஜையாகும். இந்த கால பூஜையில் "பஞ்ச கவ்வியத்தால்" (பசும்பால், பசுந்தயிர், பசுநெய், கோமியம், கோசாணம்) அபிஷேகம் செய்து, மஞ்சள் நிற பொன்னாடை அணிவித்தும், தாமரைப் பூவால் அர்ச்சனையும், அலங்காரமும் செய்து, பாசிப்பருப்பு பொங்கல் நிவேதனமாக படைத்து, நெய் தீபத்துடன் முதல் கால பூஜை ரிக் வேதபாராயணத்துடன் நடத்தப்படுகின்றது. இந்த காலத்தில் விரதமிருந்து பூஜிப்பதால் நம் பிறவி கர்மாக்களில் இருந்து விடுபட்டு நற்பலன்களை அடையலாம்.

**இரண்டாம் யாமம்:** இந்த இரண்டாவது காலை பூஜையை காக்கும் தேவன் 'விஷ்ணு'. சிவபெருமானுக்கு செய்யும் பூஜையாகும். இந்த காலத்தில் பஞ்சாமிர்த அபிஷேகம் செய்தும், சந்தன காப்பு சாற்றியும், வெண்பட்டு ஆடை அணிவித்து அலங்காரம் செய்தும், அர்ச்சனைகள் செய்தும், இனிப்பு பாயசம் நிவேதனமாக படைத்து, நல்லெண்ணை தீபத்துடன், இரண்டாவது கால பூஜை யஜுர்வேத பாராயணத்துடன் நடத்தப்படுகின்றது. இந்த காலத்தில் விரதமிருந்து பூஜிப்பதால் தன தானிய சம்பத்துக்கள் சேரும்.

**மூன்றாம் யாமம்:** இந்த பூஜை சக்தியின் வடிவமாக அம்பாள் பூஜிப்பதாகும். இந்த காலத்தில் தேன் அபிஷேகம் செய்தும் பச்சை கற்பூரம் மற்றும் வில்வ இலையைக் கொண்டு அலங்காரம் செய்தும், சிவப்பு வஸ்திரம் அணிவித்தும், ஜாதி மல்லி பூவைக் கொண்டு அர்ச்சனைகள் செய்து 'எள் அன்னம்' நிவேதனமாக படைத்து, இலுப்பை எண்ணை தீபத்துடன் சாமவேத பாராயணத்துடன் பூஜை முடிக்கப்படுகிறது.

இந்த காலத்திற்குரிய சிறப்பு என்றால் இதை லிங்கோத்பவ காலம் என்றும் இந்த காலத்தில் சிவபெருமானின் அடி முடியைக் காண வேண்டி பிரம்மா அன்ன ரூபமாக மேலேயும், மகாவிஷ்ணு வராக ரூபமாக பாதாள லோகத்தையும் தேடிய சிறப்புடையது இந்த காலம். இந்த காலத்தில் விரதமிருந்து பூஜிப்பதால் எந்தவித தீய சக்தியும் நம்மை அண்டாமல் இருக்க சக்தியின் அருள் கிடைக்கும்.

**நான்காம் யாமம்:** இந்த நான்காவது கால பூஜை முப்பத்து முக்கோடி தேவர்களும், முனிவர்களும், ரிஷிகளும், பூதகணங்களும், மனிதர்களும் அனைத்து ஜீவராசிகளும் சிவபெருமானை பூஜிப்பதாக கருதப்படுகிறது. குங்குமப்பூ சாற்றி, கரும்பு சாறு மற்றும் பால் அபிஷேகம் செய்தும், நந்தியாவட்ட பூவால் அலங்காரமும், அர்ச்சனையும் செய்து அதர்வண வேதப் பாராயணத்துடன் சுத்தான்னம் நிவேதனமாகப் படைத்தும், தூப தீப ஆராதனைகளுடன் 18 வகை சிறப்பு அலங்கார அபிஷேக பூஜைகள் செய்யப்படுகிறது. மிக உயர்வான இந்த மகா சிவராத்திரி விரதத்தை இருந்து சிவபெருமானை வழிபட்டு அனைத்து செல்வத்தையும், வாழ்வில் மகிழ்ச்சியையும் அடைவோமாக.

**அறிவியலை இணைக்கும் மகா சிவராத்திரி**

'லூாமினிபெரஸ் ஈத்தர்' (Luminiferous Eather) எனப்படும் ஒரு பிரம்மாண்ட பிரபஞ்ச சக்தி மகா சிவராத்திரி அன்று மட்டுமே அதி வேகத்தில் பூமியை நேரடியாக வந்து இறங்கும். இந்த நேரத்தில் தூங்காமல் இருந்தால் அபரிமிதமான சக்தி கிடைக்கும். இதனால் பல நன்மைகள் உண்டு. இந்த சக்தி வேறு எந்த நாளும் கிடைக்காது. எனவேதான் மகா சிவராத்திரியன்று தூங்காமல் விழித்திருக்க வேண்டும் என்று கூறுகிறார்கள். ஈத்தர் எனப்படும் சக்தி தான் இந்த உலகத்தை இயக்குகிறது. இந்த ஈத்தர் உலகம் முழுவதும், அண்டவெளி முழுவதும் நிறைந்து இருக்கிறது. மேலும் பூமியை நோக்கி ஒவ்வொரு வினாடியும் வந்துகொண்டே இருக்கிறது.பூமி சூரியனை நீள்வட்ட பாதையில் சுற்றி வருகிறது. இதில் இரண்டு நீள்வட்ட பாதையில் உள்ளது. ஒன்று சிறிய நீள்வட்டப் பாதை, மற்றொன்று பெரிய நீள்வட்டப் பாதை. பூமி பெரிய நீள்வட்டப்பாதையில் இருந்து சிறிய நீள்வட்ட பாதிக்கும் மாறும் நேரம் தான் இந்த மகா சிவராத்திரி நேரம்.

மேலும் ஈத்தர் என்ற சக்தி எப்பொழுதும் பூமியை நோக்கி வந்து கொண்டே இருக்கிறது. வருடத்தில் ஒவ்வொரு மாதமும் சிவராத்திரி வரும். ஒவ்வொரு மாதமும் வரும் சிவராத்திரியில் ஈத்தர் சக்தி சற்று அதிகமாக இருக்கும். ஆனால், வருடத்தில் ஒருமுறை வரும் மாசி மாத சிவராத்திரி மட்டும் அபரிமிதமாக, அளவுக்கு அதிகமாக சக்தி இருக்கும். இதற்கு நிகர் வேறு எந்த மதமும் இருப்பதில்லை. எனவேதான் இந்த சிவராத்திரியை மகா சிவராத்திரி என்று அழைக்கிறார்கள்.

பிரான்ஸ்

# ரஷ்ய தூதரகம் மீது குண்டு தாக்குதல்




பிரான்ஸ் நாட்டின் மார்சே நகரில் உள்ள ரஷ்ய தூதரகத்தில் திடீரென திங்கட்கிழமை (24) குண்டுவெடிப்பு இடம்பெற்றுள்ளது.

இதனை தொடர்ந்து, சம்பவ பகுதிக்கு ஏறக்குறைய 30 தீயணைப்பு வீரர்கள் சென்றறுள்ளர்.

இதுபற்றி டாஸ் செய்தி நிறுவனம் வெளியிட்ட செய்தியில், தூதரக பூந்தோட்ட பகுதியில் மர்ம நபர்கள் சிலர் 2 குண்டுகளை வீசி சென்றுள்ளனர் என தெரிவித்துள்ளது.

அந்த பகுதியில், கார் ஒன்று நின்றிருந்தது. அது வேறொரு பகுதியிலிருந்து திருடப்பட்டது என கூறப்படுகிறது.

எனினும், இந்த சம்பவத்தில் யாருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை எனவும் கூறப்படுகிறது.

இதுபற்றி ரஷ்ய வெளியுறவு அமைச்சின் செய்தி தொடர்பாளர் மரியா ஜகரோவா கூறும்போது, மார்சே நகரில் அமைந்த ரஷ்ய தூதரகத்தின் மீது நடந்த குண்டுவெடிப்பு சம்பவம் பயங்கரவாத தாக்குதலின் அறிகுறிகளாகும்.

இதுபற்றி பிரான்ஸ் உடனடியாக, முழு அளவிலான விசாரணை மேற்கொள்ள வேண்டும். ரஷ்ய அமைப்புகளின் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் உடனடியாக எடுக்க வேண்டும் என கூறியுள்ளார்.

கடந்த வாரம் புதன்கிழமை, ரஷ்யாவின் வெளியுறவு நுண்ணறிவு பிரிவு வெளியிட்ட செய்தியில்,

“ஐரோப்பாவில், குறிப்பிடும்படியாக ஜெர்மனி, பால்டிக் மற்றும் ஸ்கேன்டிநேவியன் நாடுகளில் உள்ள ரஷிய தூதரகங்கள் மீது பயங்கரவாத தாக்குதல்கள் நடத்துவதற்கான சாத்தியங்கள் பற்றி உக்ரைன் அதிகாரிகள் பரிசீலித்து வருகின்றனர்” என எச்சரித்து இருந்தது.

இந்நிலையில், பிரான்சில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதற்கான காரணம் பற்றி உடனடியாக தெரியவரவில்லை. இதற்கு பின்புலத்திலிருந்து செயற்பட்டவர்கள் யாரென்ற விவரம் வெளிவரவில்லை.

இதுபற்றி பிரான்ஸ் அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர்.

சம்பியன்ஸ் கிண்ணம்:

# வெளியேற்றப்பட்ட பாகிஸ்தான், பங்களாதேஷ்

## அரையிறுதியில் நியூசிலாந்து, இந்தியா




சர்வதேச கிரிக்கெட் சபையின் சம்பியன்ஸ் கிண்ணத் தொடரிலிருந்து தொடரை நடாத்தும் பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் வெளியேற்றப்பட்டுள்ளன.

ராவல்பின்டியில் திங்கட்கிழமை (24) நடைபெற்ற பங்களாதேஷுடனான குழு ஏ போட்டியை நியூசிலாந்து வென்றமையைத் தொடர்ந்தே தொடரிலிருந்து பாகிஸ்தானும், பங்களாதேஷும் வெளியேற்றப்பட்டுள்ளன.

குழு ஏயில் நியூசிலாந்து, இந்தியாவிடம் ஏற்கெனவே பாகிஸ்தான் தோற்றதுடன், இந்தியாவுடன் பங்களாதேஷ் ஏற்கெனவே தோற்ற நிலையிலேயே தொடரிலிருந்து பாகிஸ்தானும், பங்களாதேஷும் இன்னுமொரு போட்டி மீதமிருக்கையிலேயே வெளியேற்றப்பட்டுள்ளன.

மறுபக்கமாக தமக்கிடையேயான போட்டிக்கு முன்பதாகவே மற்றைய இரண்டு போட்டிகளிலும் வென்றதுடன், ஏனைய இரண்டு அணிகளும் இரண்டு போட்டிகளிலும் தோல்வியைத் தழுவிய நிலையில் நியூசிலாந்தும், இந்தியாவும் அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றன.

இப்போட்டியில், முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட பங்களாதேஷ், மிற்செல் பிறேஸ்வெல் (4), வில் ஓ ரூர்க் (2), மற் ஹென்றி, கைல் ஜேமிஸனிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 50 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 236 ஓட்டங்களைப் பெற்றது. அணித்தலைவர் நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ 77 (110), ஜாகிர் அலி 45 (55) ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு 237 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து, றஷின் றவீந்திரவின் 112 (105), டொம் லேதமின் 55 (76) ஓட்டங்களோடு 46.1 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்த நிலையில், வெற்றியிலக்கையடைந்தது. பந்துவீச்சில், தஸ்கின் அஹ்மட், நஹிட் ரானா, முஸ்தபிசூர் ரஹ்மான், றிஷாட் ஹொஸைன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இப்போட்டியின் நாயகனாக பிறேஸ்வெல் தெரிவானார்.

லாகூரில் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ள குழு பி போட்டியில் ஆப்கானிஸ்தானை இங்கிலாந்து எதிர்கொள்ளவுள்ளது.

அமெரிக்கா

# 300 கோடி ஆண்டுகள் பழமையான கடற்கரை கண்டுபிடிப்பு

செவ்வாய் கிரகத்தில் 300 கோடி ஆண்டுகள் பழமையான கடற்கரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சூரியனை சுற்றி வந்து கொண்டிருக்கும் 9 கோள்களில், நாம் வாழும் பூமிக்கு அடுத்தபடியாக இருப்பது செவ்வாய். இந்த செவ்வாய் கிரகத்தில் கடந்த 2018இல் கியூரியா சிட்டி விண்கலத்தை இறக்கி அமெரிக்காவின் விண்வெளி நிறுவனமான நாசா ஆய்வு மேற்கொண்டது.

அந்த ஆய்வில், செவ்வாய் கிரகத்தில் 30 கோடி ஆண்டுகளுக்கு முற்பட்ட பண்டைய கரிமப் பொருள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

மேலும், அடுத்த 20 ஆண்டுகளில் செவ்வாய் கிரகத்தில் மனிதர்கள் குடியேறுவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது.

இதேபோல், செவ்வாய் கிரகத்தில் ஆய்வு மேற்கொண்ட ஐரோப்பிய விண்வெளி நிறுவனம், அங்கு பூமத்திய ரேகைக்கு அடியில் தூசி நிறைந்த பனிக்கட்டிகள் இருப்பதை கண்டுபிடித்து தண்ணீர் இருப்பதை உறுதி செய்தது.

தற்போது, சீன விண்வெளி ஆய்வு நிறுவனம் அனுப்பிய ஜூராங் ரோவர் கருவி, அங்கு 300 கோடி ஆண்டுகள் பழமையான கடற்கரை படிமங்களை இருப்பதை கண்டறிந்துள்ளது.

ரஷ்யா

ஐ.நா. வாக்கெடுப்பில்

# ரஷ்யாவுக்கு ஆதரவளித்த அமெரிக்கா




ரஷ்யா மற்றும் உக்ரைன் நாடுகளுக்கு இடையிலான போரை விரைவில் முடிவுக்குக் கொண்டுவரவும், அமைதியான முறையில் தீர்வு காணவும் ஐ.நா. பொதுச் சபை நேற்று தீர்மானம் கொண்டு வந்து வாக்கெடுப்பு நடத்தியுள்ளது.

இந்த வாக்கெடுப்பில் ரஷ்யாவுக்கு ஆதரவாக அமெரிக்கா வாக்களித்தது.

193 உறுப்பினர்களைக் கொண்டுள்ள ஐ.நா. பொதுச் சபை உக்ரைன் மற்றும் அதன் ஐரோப்பிய நட்பு நாடுகள் தாக்கல் செய்த “விரிவான, நியாயமான மற்றும் நீடித்த அமைதியை மேம்படுத்துதல்” என்ற தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்தன.

இந்த தீர்மானத்திற்கு மொத்தம் 93 ஆதரவு வாக்குகளும், 18 எதிரான வாக்குகளும் பதிவாகின. மேலும் 65 பேர் இதில் வாக்களிக்கவில்லை.

ஐ.நா. பொதுச் சபை வாக்கெடுப்பில் இந்தியா வாக்களிக்க வேண்டாம் என்ற நிலைப்பாடு கொண்டிருந்து.

முந்தைய ஜோ பைடன் அரசு உக்ரைனுக்கு ஆதரவான நிலைப்பாடு கொண்டிருந்தது. மேலும், ரஷ்யாவுக்கு எதிரான கருத்துக்களை முன்வைத்து வந்தது. இந்த நிலையில், அமெரிக்காவில் சமீபத்திய ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து அந்நாட்டில் அமைந்துள்ள ட்ரம்ப் தலைமையிலான புதிய அரசு ரஷ்யாவுக்கு ஆதரவான நிலைப்பாடு கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# சம்பியன்ஸ் கிண்ணத்திலிருந்து கார்ஸ் வெளியேற்றம்




சர்வதேச கிரிக்கெட் சபையின் சம்பியன்ஸ் கிண்ணத் தொடரிலிருந்து பிறைடன் கார்ஸ் வெளியேற்றப்பட்டுள்ளார்.

இடது பெருவிரல் காயம் காரணமாக இங்கிலாந்தின் பயிற்சியை திங்கட்கிழமை (24) கார்ஸ் தவறவிட்டிருந்தார்.

கார்ஸ் தொடரிலிருந்து வெளியேறுவது சர்வதேச கிரிக்கெட் சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்டமையையடுத்து, சுழற்பந்துவீச்சாளர் றெஹான் அஹ்மட் குழாமுக்கு கார்ஸின் இடத்துக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

அணியில் கார்ஸை ஜேமி ஒவெர்ட்டன் பிரதியிடுவாரென எதிர்பார்க்கப்படுகிறது.




சர்வதேச மாஸ்டர்ஸ் லீக்:

# அவுஸ்திரேலியாவை வென்றது மேற்கிந்தியத் தீவுகள்

சர்வதேச மாஸ்டர்ஸ் லீக் தொடரில், நவி மும்பையில் திங்கட்கிழமை(24) நடைபெற்ற அவுஸ்திரேலிய மாஸ்டர்ஸுடனான போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் மாஸ்டர்ஸ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: மே. தீவுகள்

அவுஸ்திரேலியா: 216/8 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: ஷேன் வொற்சன் 107 (52), டான் கிறிஸ்டியன் 32 (15) ஓட்டங்கள். பந்துவீச்சு: அஷ்லி நேர்ஸ் 3/16 [3], ரவி ராம்போல் 2/23 [4])

மே. தீவுகள்: 220/3 (19.2 ஓவ. ) (துடுப்பாட்டம்: லென்டில் சிமொன்ஸ் ஆ.இ 94 (44), டுவைன் ஸ்மித் 51 (29), பிரயன் லாரா 33 (21), சட்விக் வோல்டன் ஆ.இ 23 (11) ஓட்டங்கள்.

பந்துவீச்சு: டான் கிறிஸ்டியன் 1/30 [4])

போட்டியின் நாயகன்: அஷ்லி நேர்ஸ்

# பெல்ஜிய மீள்வருகைக்குத் தயாராகியுள்ள கோர்துவா



பெல்ஜியம் தேசிய அணித் தெரிவுக்கு மீண்டும் தயாராகியுள்ளதாக அவ்வணியின் கோல் காப்பாளர் திபோ கோர்துவா தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் அடுத்த மாதம் 32 வயதான கோர்துவா அணிக்குத் திரும்புவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னைய பயிற்சியாளர் டொமெனிக்கோ டெடெஸ்கோவின் கீழ் விளையாட கோர்துவா மறுத்த நிலையில், தற்போது அவர் பதவி நீக்கப்பட்டுள்ள நிலையிலேயே கோர்துவா அணிக்குத் திரும்ப ஏதுவாக உள்ளது.

அணித்தலைமை வழங்கப்படாதைத் தொடர்ந்து 2023ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் கோர்துவா விளையாடவில்லை.

உத்தர பிரதேசம்

# இன்றுடன் முடிகிறது மகா கும்பமேளா



ஒன்றரை மாதமாக விமரிசையாக நடைபெற்றுவரும் மகா கும்பமேளா, புதன்கிழமையுடன் (26) நிறைவடைகிறது.

உத்தரப் பிரதேசத்தில் 144 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் மகா கும்பமேளா நிகழ்ச்சி கடந்த மாதம் 13ஆம் திகதி தொடங்கியது. 45 நாட்கள் மகா கும்பமேளா நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றுள்ளது.

இதுவரை 60 கோடிக்கும் அதிகமான பக்தர்கள் கும்பமேளாவுக்கு வருகை தந்து, திரிவேணி சங்கமத்தில் புனித நீராடியுள்ளனர்.

இந்நிலையில், ஒன்றரை மாதமாக விமரிசையாக நடந்து வரும் கும்பமேளா, மகா சிவராத்திரி தினமான புதன்கிழமையுடன் (26) நிறைவடைகிறது.




புதுடெல்லி

# ஆம் ஆத்மி எம்.எல்.ஏ.க்கள் 11 பேர் இடைநீக்கம்

டெல்லி சட்டசபையில் இருந்து ஆம் ஆத்மி எம்.எல்.ஏ.க்கள் 11 பேரை ஒருநாள் இடைநீக்கம் செய்து, விஜயேந்தர் குப்தா உத்தரவிட்டுள்ளார்.

டெல்லி முதலமைச்சர் அலுவலகத்திலிருந்து அம்பேத்கர் மற்றும் பகத் சிங்கின் புகைப்படங்கள் அகற்றப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து இரண்டாவது நாளாக, செவ்வாய்க்கிழமையும் (25) ஆம் ஆத்மி எம்எல்ஏக்கள் சட்டசபையில் போராட்டம் நடத்தியுள்ளனர். எச்சரிக்கையை மீறியும் போராட்டம் தொடர்ந்ததால், முன்னாள் முதலமைச்சரும் எதிர்க்கட்சி தலைவருமான அதிஷி, முன்னாள் அமைச்சர் கோபால் ராய் உட்பட 11 எம்.எல்.ஏ.க்களை ஒருநாள் இடைநீக்கம் செய்து சட்டசபை தலைவர் விஜயேந்தர் குப்தா உத்தரவிட்டுள்ளார்.

புத்தளம் லெஜன்ட்ஸ் கழகத் தொடர்:

# சம்பியனான ஆர்.ஜே. ட்ரான்ஸ்போர்ட்

எம்.யூ.எம். சனூன்




புத்தளம் லெஜன்ட்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற 30 வயதுக்குட்பட்ட மேற்பட்டோருக்கான தொடரில் ஆர்.ஜே. ட்ரான்ஸ்போர்ட் அணி சம்பியனானது.

எட்டு அணிகள் பங்கேற்ற இத்தொடரின் இறுதிப் போட்டியானது புத்தளம் சாஹிரா விளையாட்டரங்கில் ஞாயிற்றுக்கிழமை (23) நடைபெற்றபோது கற்பிட்டி பேர்ள்ஸ் அணியை 2-1 என்ற கோல் கணக்கில் வென்றே ஆர்.ஜே. ட்ரான்ஸ்போர்ட் சம்பியனானது.

தொடரின் சிறந்த வீரரான பேர்ள்ஸின் ரிழ்வானும், சிறந்த கோல் காப்பாளரான ஆர்.ஜே.ட்ரான்ஸ்போர்ட்டின் லுக்மானும் தெரிவாகினர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 26, பெப்ரவரி 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.